1159

1159
2-55

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

ஆசிரியர்: இளவழகனார்.

# "முல்லைக் கொடி"

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, சித்திரை, [illegible]—4—55 தளிர்—29

எங்கள் திருப் பயணத்தை முடிக்க மனமின்றி முடித்துத் திருக் குடந்தையினின்றும் திரும்புங்கால் திருக்கழுக்குன்றத்தில் வழுக்கா திருக்கும் இறைவனை வழிபட்டுக் கொண்டு திருமுறை இன்னிசைப் பெருவிழாவைக் கண்டு களித்து எங்கள் இல்லங்கள் வந்தடைந்தோம்.

அன்று மணிவாசகப் பெருந்தகை திருப்பெருந் துறையில் குருந்த மா நீழலில் இறைவன் குருவடிவில் அடியார் குழாம் சூழ வீற்றிருந்து தம்மை ஆட்கொண்ட பின் எல்லாரும் மறைந்தபோது தம் தனிமையை நோக்கிச் சொல்லொணாத் துயரம் எய்தியது போன்ற நிலை தான் எங்கள் நிலையும்.

ஏறக்குறைய ஒரு மாத காலம் ஆசிரியரோடும் அன்பர்களோடும் இடைவிடாது பழகி உலவிய பின் அவர்களையும் சிவாலயங்களையும் விட்டுப் பிரிவது மிக்க வருத்தம் தந்தது. இன்று கனவிலும் நனவிலும் எங்களுக்குத் திருப்பயண நினைவுதான். கண்ணை மூடினால் சிவாலயங்கள் எதிர்நிற்கின்றன; பெருந் திரளான கூட்டம் கண்முன் தோன்றுகிறது; எங்கள் குருகுலக் குடும்பம் இறைவனை வணங்கிக் கூடிக் களிக்கின்றது. எங்கள் ஆசிரியப் பெருந்தகையின் அற்புதமான அருமை மிக்க அருளுரைகள் இரு செவிகளிலும் 'ரீங்கார'மிடுகின்றன. அடுத்த ஆண்டுத் திருப்பயணம் என்று வரும்? எப்போது தொடங்கும்? என நாட்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## 5 ஆர்[illegible]

சமய குரவர் நால்வர்

1. உலக வாமொளிப் பொது[illegible]
நிலவு நம்சிவ நெறியதன் மாட்சிகட்(கு)
அலகி லாப்பணி யாற்றி யருள்வழி
குலவ நின்ற கொள்கையர் நால்வரால்!

அவர்கள் இயற்றிய தொண்டு

2 நாட்டி லன்றறம் நாத்திகப் போக்கினில்
கூட்ட விழைந்த கூட்டமும், கொள்கையில்
வேட்டம் விளைத்துகல் வீட்டு நெறிக்கியல்
நாட்ட மகற்றி நலிவுசெய் கூட்டமும்,

3. அகல இருமையும் ஆற்று மியற்கைப்
புகல்நெறிப் போகனை புரிந்தவர் தாய்மொழி
திகழுநற் றூயகம் ஆகிய தேட்டங்கள்
மிகவும் போற்றி உயர்நெறி மீட்டினர்!

4. இனையவோ அவர் இன்றும் அகன்றிடாப்
புனைவுச் சாதிப் புன்மைகள் போக்கிட
வினையென் றேங்கி விழும்மடி தேய்த்திட
நினைவ ரும்பணி நெடிதி யற்றினர்!

5. ஊர்கள் தோறும் உலாவிப் பலபல
நீர்மை செய்து நிலைத்திடு தொண்டுகள்
ஏர்செ யும்மிடைக் காலத்தி லேயவர்
சீர்மி கச்செயார் என்னினென் செய்வதே!

6. தாயுந் தந்தையு மாந்தமிழ் சைவமும்
ஏயுந் திராவிட நாக ரிகமுமின்(று)
ஆயும் வகையுமி லாமலன் றேகெட்டுப்
போயொ ழிந்திருக் கும்மிது பொய்மையோ?

7. மக்க ளாட்சி மலர்ச்சி புரட்சியென்(று)
எக்க ளித்திடு மின்றும் இயற்றலா
மக்கள் தொண்டுகள் மன்னரும் செல்வரும்
தொக்குச் செய்திடத் தோற்றினர் அன்றரோ!

நால்வர் வழியில் குருகுலச் செல்வர்கள்

8. அன்ன வர்க ளடிச்சு வட்டினை
இன்ன நாளிலெம் இளவழ கப்பெயர்
துன்னு மாசான் தொட்டுப் பணிசெய
முன்னி னனவன் மொய்ம்பு சிறியதோ!

9. அமைப்புகள் பலபல் ஆற்றகி லாவகை
இமைக்குமுன் பலதிறத் தியலுமெம் போலியர்

தமைத்தம தருநெறி தொடர்ந்திடச் செய்தவர்
சமைத்திடு பணிகளின் சதுரெவண் சொல்வதே!

10. அண்மையில் இருநா றன்பர்கள் மாணவர்
உண்மையைத் தொடரும் ஒளியெனப் பின்வர
வண்மைகொள் சோழ வளப்பதி கண்டபேர்
எண்மையை என்னொரு நாவும் இயம்புமோ!

11. கல்வியும் செல்வமும் கவினுற வாய்த்தவர்
பல்வகைத் தொழிலர்கள் நல்வகை அலுவலர்
மெல்லியல் மாதர்கள் மிகவு முதியவர்
செல்வக் குழவியர் சிறிதும் நடந்திலா,

12. வசதிகள் மிக்க வழிவழிச் செல்வர்கள்
அசதி அறிந்திடா அருமையர் பெருமையர்
இசைமுதற் கலைஞர்கள் தொண்டர்கள் எல்லாம்
விசையுணர் வேதோ விழுங்கிய நிலையராய்;

13. வேளையில் உணவிலை, வேண்டிய ஓய்விலை,
நாளைய வசதிகள் என்னெனும் நனவிலை,
தாளிலும் வலிவிலை, தோளிலும் மிகுசுமை,
எளிதம் இலைஇஃ தன்மையிந் நிலையிலும்;

14. அடுத்ததெவ் வூர்எவர் பாடல தற்கிவண்
விடுத்திடும் ஊரின் வியத்தகு நிலைகளென்
மடுத்திடும் அருளி(ன்)னும் மாட்சி யடைந்திட
எடுத்தகு பணிகளென் என்னெனச் சூழுவர்.

15. ஊர்வலம் வருவார் உவந்தடுத் திடும்லா
வேற்பினை ஏற்பார் வேண்டுபல் விளக்கங்கள்
சார்தரச் செய்வார் தகும்வகை வழிபா(டு)
ஏர்தரப் புரிவார் இன்னுரை ஈவார்;

16. 'சான்றோ ருடையது தொண்டகன் று'மெட்டும்
ஆன்றோர் மொழியை அணிசெய்வ ரெங்கும்
ஏன்ற வசதிகள் எதுவெனும் கொண்டமைந்(து)
ஆன்ற பணிசெயும் ஆர்வத்த ராவர்;

17. ஆர்வத் தமைந்தநன் னிகழ்ச்சிகள் யாவெனும்
சேர்வதெந் நேரத்தி லாயினும் நீடுறும்
ஓர்வகை வசதியும் உவந்திலர் 'உடல்நலம்
சீர்கெடு மே' எனத் திரிந்தனர் குறைவிலர்;

சோழநாட்டுச் சீரடியார் பேரன்பு

18. தில்லை முதல்செழித் தோங்கு குடந்தை
எல்லை வரையிவர் எங்கெங்கு செல்கினும்
சொல்லும் வகைத்தோ சோழநன் னாட்டினர்
ஒல்லை இவர்கட் குதவிய வகைகள்!

19. ஏர்திகழ் யானை குடைகொடி நிறைகுடம்
ஓர்வகை யோஅவர் உவந்தளி வரவேற்(பு)

# 6. தூரசிப் பயணம்

அன்பர் நடராசன் அவர்கள் அண்மைக் காலத்திலேயே குரு குலத்திற் சேர்ந்தவர்; அதன் நிகழ்ச்சிகளில் அவ்வளவாக ஈடு பட்டுப் பழக்கமில்லாதவர்; என்றாலும் அவர்தம் ஆர்வத்தையும் பணிக்குச் சலியாப் பான்மையை யும் கடிதப் போக்கு வரவில் நாடோறும் உதவி செய்த நிலையால் கண்டு அவர்களை முன்னால் அனுப்பித் தக்கவர்கள் சிலரையேனும் பார்க்கச் செய்ய லாம் என்று தீர்மானித்தோம்.

ஆசிரியரிடமும் முதன்மை யான மற்றும் சில அன்பர்க ளிடமும் சொல்லி அவர்கள் இசைவைப் பெற்று 26-5-54 அன்று இரவு அவரைச் சோழ நாட்டுக்கு அனுப்பினோம்.

பல்வேறு உதவிகளில் அன்பர் R. நடராசன் அவர்களின் தொண்டு தலை சிறந்ததாய் அமைந்தது. அவர் அவ்வளவு பொறுப்பாகப் பயணப் பணிகள் பலவற்றையும் மேற்கொண்டு இரவு பகல் எனப் பாராதும் இறுதிவரையில் தளராமலும் பணி செய்தார்.

தூசிப் பயணத்தில் நம் அன்பர் நடராஜன் அவர்கள் சென்று பார்த்துப் பேசிய

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை எண்ணிக்கொண்டே ஏங்கி நிற்கின்றோம்!

நமச்சிவாய வாழ்க!
நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன்
தாள் வாழ்க!

—மோகனரங்கன்.

ஆர்வமொ டூட்டிய அமுதுசிற் றுண்டிகள்
நார்திகழ் இனிப்புகள் நல்லபல் சுவைநீர்!

போது அவர்களைத் தகுதியாக வரவேற்று இன்னுரை கூறி



மாம்பாக்கம் குருகுலத்தார் செய்த சோழநாட்டுத் தலவழிபாட்டுத் திருப்பயணம்:
வரிசையாய் வண்டிகளில்!

20. வரிசை வரிசையாக் காளைநல் வண்டிகள்
பரிசில் முதல்விசை யூர்திகள் பண்புடன்
வரிசை வழாது வழங்கினர் அன்னவர்
பரிசை யீண்டு பகரவும் ஒல்லுமோ!

21. தில்லையில் திருமுறை, குடந்தைகுற் றாலத்தில்
வல்ல சிவனடி யார்திருக் கூட்டத்தர்,
நல்லசிர் காழியில் சம்பந்தர் கழகத்தார்,
அல்லல்தீர் ஆடு துறையப்பர் நெறியினர்;

22. என்றுபற் பலஅருள் அமைப்பினர் முன்வந்(து)
இன்றிவர்க் காற்றிய எழில்மிகு சிறப்புகள்
நின்றது நூல்களில் செவிகளில் அல்லால்
நன்றிவண் காணநாம் நடந்தது முண்டோ!

23. திருமடங்களும் தேர்ந்தநற் செல்வரும்
அருமை தெரிந்தநல் லன்பரும் தம்முடைப்
பெருமை சிறுமைகள் பெரிது மறந்தனர்
அருமை அருமையீ தென்றே அணைந்தனர்:

24. ஊட்டினர் ஊர்வலம் நடத்தினர் ஊரெலாம்
காட்டினர் கோயில்கள் கழுவினர் மெழுகினர்
நாட்டினர் தோரணம் நல்விளக் காதிய
கூட்டினர் எங்குமநற் கூட்டங்கள் மாதோ!

ஊக்க மூட்டித் திருப்பயணத் திற்குப் பல வகையிலும் ஆக்கம் செய்த பெரியோர்களில் முதலவர், தில்லையிலும் அடுத்துத் திருநாரையூர் வரையிலும் திருக்கூட்டத்தார்க்கு உணவு இருக்கை முதலிய வசதிகளும், திருக்காணாட்டுமுள்ளூர் வரையில் வண்டி வசதிகளும் தக்கவர்களைக் கொண்டு செய்வித்த தில்லைத் திருமுறைக் கழகத் தலைவர் திரு ஆ. சு. கணபதியா பிள்ளை அவர்கள் ஆவார்.

தில்லையில் திருக்கூட்டத்தார்க்குச் சிறந்த உணவும், இருக்கை முதலிய வசதிகளும் செய்து கொடுத்த திரு. இரத்தினசாமி செட்டியார் அவர்கள் தூசிப் பயணத்தை முடித்துத் திரும்பிய போது அன்பர்க்கு (2-8-54) உணவு முதலிய வசதிகள் செய்து கொடுத்து அவரைத்

### ஆர்கொலோ சதுரர்?

25. இவ்வகைப் பணிஅருள் பயணமேற் கொண்ட
மெய்வழித் தலைவரோ? மேவிய துணைவரோ?
உய்வழி தேர்ந்துபல் உதவிகள் செய்த
அவ்வகை அன்பரோ! ஆர்கொலோ சதுரர்!

—தமிழ்ச் சிறுவன்

---

திருக்கூட்டத்தோடு சேர்ந்திருக்கிறார்கள்.

வைதீஸ்வரன் கோயிலில் சாது மடத்து மேலாளர் திரு. இராமலிங்க தேசிகர் அவர்கள் (27, 28-5-54 நண்பரே போல வரவேற்று உபசரித்துத் திருக்கூட்டத்தினர்க்குத் தம் மடத்தில் ஒரு வேளை உணவு வழங்கும்படி தம் தலைவர் உயர்திரு, கு. பெரி. அண்ணாமலை செட்டியார் (இராமச்சந்திரபுரம், திருச்சி) அவர்கள் . எழுதியிருப்பதாய்த் தெரிவித்து ஊக்கமூட்டி அனுப்பியிருக்கிறார்.

திருப்புன்கூர்த் திருக்கோயில் அறக்காப்பாளர் உயர்திரு. சீனிவாச ரெட்டியார் அவர்கள் (29-5-54) வைதீஸ்வரன் கோயிலில் திருக்கூட்டத்தார்க்கு நகரத்தார் அன்னசத்திரத்தில் ஒரு வேளை உணவுக்கு இசைவு பெற்றதோடு, திருப்புன்கூரில் தாமே உணவிடுவதாகக் கூறி, நீடூர் கடலூர் முதலிய ஊரில் வசதி செய்யத்தக்கவர்கள் முகவரிகளையும் கொடுத்து, எதிர்பாராத நிலையில் வைதீஸ்வரன் கோயிலுக்கு வந்திருந்த தருமை ஆதீன அதிகாரியாகிய திரு. கலியாணசுந்தர தேசிகரவர்களிடம் அன்பரை அறிமுகப்படுத்திவைத்திருக்கிறார்.

சீர்காழியில் (28-5-54) நம் அன்பர் உயர்திருவாளர்கள் இராமநாத முதலியார், கிருஷ்ண முதலியார், சீனிவாச முதலியார், தென்பாதி குற்றால நாராயணம் பிள்ளை, விருத்தாசல முதலியார் முதலியவர்களை எல்லாம் கண்டு பேசியிருக்கிறார். அவர்கள் எல்லாரும் தகுதியறிந்து அதற்கு ஏற்ப ஆதரவு செய்யக் கூடியவர்கள் என்று தெரிகிறது. நம் குருகுலம் பற்றி முன்னால் ஏதும் அறியாதவர்கள் ஆதலின் அவர்கள் இயலும் வசதிகளைச் செய்வதாகச் சொல்லி அனுப்பியிருக்கின்றார்கள். ஆனால் நம் திருக்கூட்டம் சென்றபோது அவர்கள் செய்த வரவேற்பு ஊர்வலம் பொதுக் கூட்டம் உணவு முதலியவைகள் எதிர் பார்த்ததை விடப் பல மடங்கு சிறப்பாக இருந்ததைக் கண்டு நம் நடராசன் அவர்களே பெரிதும் வியந்து மகிழ்ந்ததாகத் தெரிகிறது.

மாயூரத்தில் (29- 5- 54) உயர் திரு. கைலாசம் பிள்ளை அவர்களையும், அவர்கள் புதல்வர் திரு கனகசபைப் பிள்ளை அவர்களையும் கண்டு திருக்கடவூரில் திருக்கூட்டத்தாருக்கு வேண்டும் வசதிகளைச் செய்ய இசைவு பெற்றிருக்கின்றார். இவ்வகையிலும் நம் குருகுல மாணவர் திரு. தண்டபாணி அவர்களின் முயற்சிகள் மறக்கக்கூடாதவை.

தருமபுரத்தில் 30-5-54 தமக்குத் தெரிந்த ஆதீனத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் வீட்டில் தங்கி, அவர்களிடம் செய்தியைக் கூறி வேண்டும் அறிவுரைகளைப் பெற்றுக்கொண்டு ஆதீனத்திற்குச் சென்று வைதீஸ்வரன் கோயிலில் கண்ட ஆதீன அதிகாரி திரு. கலியாணசுந்தர தேசிகர் அவர்களைக் கண்டு பேசி, அவர் ஆணைப்படி ஆதீன ஓதுவார் ஒருவர் செல்லவேண்டிய தலங்கள் பற்றிய வழி வகைகளைச் சொல்லக் கேட்டுக்கொண்டு சந்நிதானம் அவர்களையும் கண்டு வணங்கித் திருநீறு பெற்றுச் செய்திகளைச் சொல்லியிருக்கிறார். உடனே சந்நிதானம் திருக்கூட்டத்தோடு திரு. மருள்நீக்கியார் என்னும் சைவ விரிவுரையாளரையும் ஆதீன ஊர்தி (Motor Van) யையும் அனுப்பிவைக்கும்படி ஆணை பிறப்பித்ததாகத் தெரிகிறது. ஆதீனக் கோயில்களிலும் ஆதீனத்திற்கு வருகிறபோதும் திருக்கூட்டத்துக்குத் தக்கபடி உணவு, வழிபாடு பிரசார வசதிகள் செய்யப்பெறும் என்று தெரிந்துகொண்டு அன்பர் பெரிதும் மகிழ்ந்திருக்கிறார்.

குற்றாலத்தில் (31-5-54) திருக்கோயில் மேலாளர் அன்பாகப் பேசி, ஆதீனக் கோயிலாதலின் ஆணைப்படி எல்லா வசதிகளையும் செய்வதாகக் கூறக்கேட்டுக் கொண்டு டாக்டர் திரு. அழகப்பா அண்ணாமலை **M D H** அவர்களைக் கண்டிருக்கிறார். அன்பும் ஆர்வமும் எழுச்சியும் கிளர்ச்சியும் உடைய டாக்டர் அவர்கள் அவ்விடத்தில் திருக்கூட்டத்தாருக்குப் பெருஞ் சிறப்பாக வரவேற்பளிக்கவும், ஊர்வலம், வழிபாடு, பொதுக் கூட்டம், உணவு முதலியன நடத்தவும் ஊரிலுள்ள தக்கவர்களைக் கொண்டு முயற்சி செய்துவரும் விவரங்களை அறிந்து மகிழ்ந்து

அவர்கள் கொடுத்த மிதி வண்டியில் ஊர்ப் பெரியார்களில் கிடைத்தவர்களைக் கண்டு பேசிவிட்டு, அவ்விடத்து ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையோடு புறப்பட்டிருக்கிறார்.

ஆடுதுறையில் அப்பர் அருள் நெறிக் கழகத்தாரையும் குறிப்பாக, உயர்திரு விருத்தாசலம் செட்டியார், சொக்கலிங்கம் செட்டியார் அவர்களையும் கண்டிருக்கிறார். அவர்களும் ஒரு வேளை உணவும் இயன்ற உதவிகளும் செய்வதாகக் கூறிப் பிறகு திருக்கூட்டம் வந்தபோது கிளர்ச்சிகொண்டு நன்றாக ஈடுபட்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

திருப்பனந்தாள் (1-6-54) திருமடத்தில் திரு. ஞானசம்பந்தம் என்பவர் வழி வசதி பெற்றுத் தங்கித் திரு. பொன்னுசாமி முதலியார் என்னும் மடத்து அலுவலரவர்களைக் கண்டு, செய்திகளைக் கூறி, ஆதரவு பெற்றுக் கொண்டு திரும்பியிருக்கிறார். திருக் கூட்டம் சென்றபோது திரு முதலியார் அவர்கள் முன்னின்றும் போதாரவாக இருந்தும் எல்லாரும் திருப்பெருந்திரு சந்நிதானம் அவர்களைக் காணவும் வழி செய்ததாகத் தெரிகிறது.

குடந்தையில் (1-6-54) அன்பரவர்களைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் சிவசேனாபதி உயர்திரு P. T. S. குமாரசாமி செட்டியார் அவர்கள், தந்தை மகனை வரவேற்பதுபோல் வரவேற்றுத் திருக்கூட்டத்தார்க்குத் தாம் செய்ய இருக்கும் உணவு முதலிய வசதிகளைப் பற்றியும், எந்தெந்தக் கோயிலுக்கு எப்படி எப்படி போக வேண்டும் என்னும் வழி வகைகளைப் பற்றியும் விரிவாகப் பேசி, சிற்றுண்டியும் உணவும் ஊட்டி இன்பக்கடலில் ஆழ்த்தியிருக்கின்றார்கள்.

திருவாவடுதுறையில் (1, 3-6.54) ஆதீனத்து இயமானர் அவர்களைக் கண்டு பேசி, சந்நிதானம் அவர்கள் காசிக்குப் போயிருப்பதையும், எப்படியும் திருக்கூட்டம் அவ்விடத்துக்கு வருவதற்குள் வந்துவிடும் என்பதையும் தெரிந்துகொண்டு, திருக்கூட்டத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அவ்விடத்தில் ஆசிரியர் அவர்களின் விரிவுரையைக் கேட்டு அவர்களிடம் முன்னரே மிகவும் ஈடுபாடு கொண்ட திரு. கிருஷ்ணமூர்த்தி என்னும் போன்பர் மிகவும் உதவியாய் இருந்திருக்கிறார்.

அன்பர் அவர்கள் தருமை, துறைசை ஆதீனங்களுக்கு முறையே 27-5-54, 31-5-54, தேதிகளிலும் சென்றதாகத் தெரிகிறது. ஆயினும், அப்போது ஆதீனத்தார்களைத் தக்கபடி அணுகிச் செய்தி சொல்ல இயலாமல் மீண்டும் போயிருக்கிறார். தம் தூசிப் பயணத்தில் தாம் அங்கங்கே மற்றும் பல அன்பர்களையும் தேடிச் சென்று காணமுடியாமலும், கண்ட இடங்களில் சுருக்கமாகச் செய்திகளைச் சொல்லியும், சிறிதும் ஓய்வு கொள்ளாது இரவும் பகலும் சக்கரம்போலச் சுற்றி ஒவ்வொரு கொடியையும் பயன்படுத்தியுமிருக்கிறார் என்று தெரிகிறது.

இப்படி அவர் உணர்ச்சி மிகுதியால் முன் வந்து ஒப்புக்கொண்டு செய்த தூசிப் பயணம் திருப்பயணத் திருக்கூட்டத்திற்குப் பலவகையில் நன்மையை விளைத்திருக்கின்றது. அன்பர் அவர்களின் ஆர்வமும் உழைப்பும் எல்லையற்றன. ஆண்டவன் அவர்களுக்கு ஏற்ற நலங்களை அருள்செய்வான் என்பதில் ஐயமில்லை.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்து உதவிகள் பல செய்ததோடு, பயணத்தின் நினைவு அன்பர்களுக்கு என்றும் இருக்கும்படி, அவர்களுக்கு நூல்கள் வழங்கியதும் பின் திருக்கழுக்குன்ற விழாவுக்கு ஓர் அறக்கட்டளை நிறுவியதும் பெரிதும் போற்றி மகிழத்தக்க பெருஞ் செயல்களாக இருக்கின்றன!

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

## 7. திருமடங்களிலே

**திருத் தருமபுரம்:**

சோழநாட்டுத் திருப்பயணத் திருக் கூட்டம் ஆசிரியர் இளவழகனார் அவர்களின் தலைமையில் திருப்பயண அறிக்கையிற் கண்டபடி தில்லையில் தொடங்கிப் பல திருத்தலங்களை வழிபட்டுக் கொண்டு 14-6-54 காலை திருவிளநகர் வழிபாட்டுக்குப் பின் தருமபுர ஆதீனத் திருமடத்தை அடைந்தது.

திருப்பயண நிகழ்ச்சிகளில் மிக்க ஈடுபாடும் ஆதரவு மனப்பான்மையும் கொண்டுள்ள மகா சந்நிதானம் அவர்கள், கருணையோடு திருக்கூட்டத்தினருக்குச் சிறப்பான முறையில் காலை மாலைச் சிற்றுண்டிகளும் பகலில் அறுசுவையோடு கூடிய இன்னமுதும் அளித்தற்கான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

அன்று மாலை ஆசிரியர் அவர்களுடன் திருப்பயணத் தொண்டர்கள் அனைவரையும் மகா சந்நிதானம் அவர்கள் நேரில் அழைத்து ஆடவரும் மாதருமாகச் சற்றேறக்குறைய சம எண்ணிக்கையோடு இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் திருக்கூட்டமாக வந்திருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றார்கள்.

பல காரைக்கா லம்மையார்களையும், மங்கையர்க்கரசியார்களையும், திலகவதியார்களையும் ஒருங்கு காண்பதுபோல் உங்களைப் பார்த்துப் பரமானந்த மடைகின்றேன். சமய மறுப்பாளர் தீவிரமாய் மாற்றுப் பிரசாரங்கள் செய்து மக்கள் மனதைக் குழப்பிவரும் இந் நாளில் இளையோரும் முதியோருமாய் இருபாலாரிலும் இருநூற்றுவர்க்கு மேற்பட்டவர் திரண்டு இத் திருத் தொண்டை மேற்கொண்டது பெருவியப்பையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. திருவருளின் திறத்தையும் பெருமையையும் மக்களிடையே எடுத்துச் சொல்லிச் சைவம் மீண்டும் தழைத்தோங்கிப் பயன் தருமாறு செய்ய இத் திருக்கூட்டம் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கை உண்டாகின்றது. கிடைத்தற்கரிய சிறந்த ஆசிரியர் வாய்க்கப் பெற்ற நீங்கள், அவர்கள் வழி நின்று ஆண்டுக்கொருகால், பெருந்திரளில் இத்தகைய திருப்பயணத் திருத்தொண்டு மேற்கொள்வது பெரிதும் பாராட்டத் தக்கது. உங்கள் எல்லாருக்கும் ஆண்டவன் அருள் நிரம்ப இருக்கின்றது" என்றெல்லாம் உணர்ச்சியோடு பேசி ஊக்கமூட்டி அருளுரை வழங்கி வாழ்த்தினார்கள்.

அப்போது, ஆசிரியர் கேட்டுக் கொண்டபடி, திருக்கழுக்குன்றத்தில் மணிவாசகப் பெருமான் திருநாளில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் நடத்தும் திருமுறைப் பெருவிழாவுக்கு ஒதுவார்களை அனுப்புவதாக வாக்களித்தார்கள். (அப்படியே 2, 3 பேரை அனுப்புவித்தார்கள்.)

அதோடு இதுகாறும் தொடர்ந்து 12 நாட்கள் திருப்பயணம் மேற்கொண்ட அன்பர்கள் ஒருநாள் ஓய்வு பெற்றுப் போதல் நல்லது என்று திருவுளங்கொண்டு, அருளே உருவாய அடிகளார் அவர்கள், திருப்பயணத் திருக்கூட்டத்தைத் தம் திருமடத்தில் தங்கச் செய்து, அனைவர்க்கும் எண்ணெய் முழுக்காட்டி இளைப்பாற்றுதற்கு ஏற்ற வசதிகளைச் செய்தருளினார்கள். அன்று மாலை, மகா சந்நிதானம் அவர்களே நேரில் இருந்து திருமடத்தைச் சார்ந்த திருக்கோயிலில் அம்பிகைக்குச் சிறப்பு வழிபாடு நடத்தி அலங்காரங்கள் செய்வித்து அனைவர்க்கும் பிரசாதம் வழங்கினார்கள்.

இவ்வாறு திருமடத்தில் மட்டுமன்றித் திருக்கூட்டத்தார் வழிபடச் சென்ற ஆதீனத் திருக்கோயில்களிலெல்லாம் திருக்கூட்டத்தார் தங்கி உணவு கொண்டு வழிபாடும், சமயப் பிரசாரமும் செய்தற்கான எல்லா வசதிகளையும் சிறப்பான முறையில் செய்விக்கும்படி ஆணை பிறப்பித்த மகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியை என்னென்று விவரிப்பது!

இம்மட்டோ! திருக்கூட்டத்தார் விரும்பியபடி 7-6-54 முதல் 18-6-54 வரை 12 நாட்களுக்குத் திருமடத்தாரின் பிரசார வாகனத்தையும், அத்துடன் 'மருள் நீக்கியார்' என்னும் மணியும் நீறும் பூண்ட மாசற்ற அன்பர் ஒருவரையும் உடன் அனுப்பிப் பேருதவி புரிந்த சந்நிதானம் அவர்களுக்குக் குருகுலத் திருக்கூட்டம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. இதுவரை மருள் நீக்கியாரையும் இவ் வாகனத்தையும் அனுப்ப இயலாமற் போனதற்குக் காரணம், திருமடத்தில் குருபூசை விழா வந்து விட்டதே ஆகும்.

இங்ஙனம் குருகுலத்தாரின் திருப்பயண வெற்றிக்குப் பேருதவி புரிந்த மகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் சைவமுந் தமிழுந் தழைத்தோங்கும் என்பதில் ஐயமென்ன இருக்கிறது!

**திருவாவடுதுறை:**

திருப்பயணத் திருக்கூட்டம் 18-6-54 அன்று பகல் 12 மணிக்

குத் திருவாவடுதுறைத் திருமடத்தை அடைந்தது. மகா சந்நிதானம் அவர்கள் காலையிலேயே திருக்கூட்ட அன்பர்களை எதிர்பார்த்து அவகளுக்குச் சிற்றுண்டி கொடுக்க வேண்டும் என்று கனிவோடு ஏற்பாடு செய்து வைத்திருந்தும் காலம் தாழ்ந்து விட்டதால் அதனைக் கொள்ள முடியாமற் போயிற்று. எனினும், விரைவில் அறுசுவையுணவு அமைக்கப்பட்டு அனைவருக்கும் மிகப் பரிவோடு பரிமாறப்பட்டது.

மாலைச் சிற்றுண்டிக்குப் பின் ஆசிரியர் அவர்களுடன் திருக்கூட்டத்தன்பர்கள் அனைவரையும் மகா சந்நிதானம் அவர்கள் நேரில் அழைத்து நலம் வினவினார்கள்.

மாதர்கள், குருகுலப் பாடல்களை இனிமையாகப் பாடக் கேட்டு, மிக மகிழ்ச்சியுற்றுப் பாராட்டினார்கள்.

பிறகு ஆசிரியர் அவர்கள் திருக்கூட்டத்திற்குத் திருமடத்திலிருந்து சில மாட்டு வண்டிகளும் 'ஜீப்' உந்துவண்டி ஒன்றும் கொடுத்து அடுத்த தலங்கள்வரை திருக்கூட்டம் செல்வதற்கு உதவினார்கள்.

இவற்றோடு திருமடத்தைச் சேர்ந்த திருக்கோயில்களுள்ள தலங்களிலெல்லாம் முன்னேற்பாட்டோடு ஆர்வங் காட்டி அதன்படி தக்க ஏற்பாடுகள் செய்து ஆதரித்தார்கள். திருக்கூட்டத்தார் தங்கவும் உணவு கொள்ளவும் வழிபாடு பிரசாரங்களைச் சிறப்பாகச் செய்யவும் வசதிகள் செய்வித்தார்கள். இயன்ற இடங்களில் வண்டி வசதிகளையும் செய்விக்கப் பணித்திருந்தார்கள்.

இரண்டொரு தினங்களேனும் திருமடத்தில் தங்கி இளைப்பாறிச் செல்லுமாறும் தெரிவித்தார்கள். மாதர்களும் ஆடவரும் பெருந்திரளாய் இங்ஙனம் திருத்தொண்டுமுகமான திருப்பயணம் மேற்கொண்டதற்கு மிக்க மகிழ்ச்சி கொண்டு அனைவரையும் பாராட்டி வாழ்த்தியருளினார்கள். மாலையில் திருமடத்தில் நடைபெறும் பூசையைச் சிறப்பு முறையில் செய்து அனைவர்க்கும் திருநீறு வழங்கினார்கள்.

நிற்க, திருமடத்து உந்து (வான்கள்) வண்டிகள் அந்த நேரத்தில் கெட்டுப்போயிருந்தமையால் அவற்றைத் திருக்கூட்டத்திற்குக் கொடுத்துதவ முடியாமல் போய்விட்டதே என்று மகா சந்நிதானம் அவர்கள் ஆராமையோடு தெரிவித்த நிலை, அவர்களின் கனிந்த உள்ளத்தை நன்றாக எடுத்துக் காட்டியது.

இங்ஙனம், குருகுலத்தார் தொண்டுகளைச் சிறப்பித்த அடிகளாரின் திருவடி மலர்களை வணங்கி மேலும் பல நல்ல தொண்டுகளைச் செய்ய உணர்ச்சி கொள்வதல்லாமல், வேறு செய்யக்கடவது என்ன இருக்கிறது!

திருப்பனந்தாள்:

காசிமடத்து மகா சந்நிதானம் அவர்கள் தம் திருமடத்து வெளியீடுகளாகிய முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், நீதி நெறி விளக்கம் போன்ற சில நூல்களைச் சில அன்பர்கள் வழி 4-6-54 அன்று திருப்பயணம் புறப்பட்ட மூன்றும் நாளே திருநாரையூருக்கு அனுப்பி, அனைவருக்கும் வழங்கச் செய்தார்கள். அது அன்பர்களுக்கு மிக்க மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் உண்டாக்கியது.

திருக்கூட்டம் 25-6-54 அன்று தம் திருமடத்துக்கு வந்தபோதும் கந்தபுராணம் உரைநடை நூலும் மற்றும் பல வெளியீடுகளும் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

திருக்கூட்டத்தார்க்கு 25-6-54 அன்று காலை மாலை சிற்றுண்டிகளும் பகல் உணவும் திருமடத்தில் மிகச் சிறப்பாகச் செய்து வைக்கப்பட்டது. நண்பகலில் மகா சந்நிதானம் அவர்கள் வழக்கப்படி செய்யும் பூசை நேரத்தில் தாமே விரும்பித் திருக்கூட்டத்தினரை வரவழைத்து அனைவருக்கும் திருநீறு கொடுத்து அடுத்த பட்டத்திலுள்ள சந்நிதானம் அவர்களைக் கொண்டு ஆசி உரை கூறச் செய்து ஊக்க மூட்டினார்கள்.

திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகப் பெருமான் திருநாளில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் திருமுறைப் பெருவிழாப் பற்றி ஆசிரியர் கூறிய விளக்கவுரைகளைக் கேட்டு மகிழ்ந்து, அதன் சிறப்பையும் முதன்மையையும் நினைந்து, அண்மையில் அத் திருவிழாவிற்கு வரும் ஓதுவார்களுக்குத் திருவமுது வழங்குவதற்கென்று ஆரம்ப உதவியாக ரூபா 5000— வைப்பு நிதியாக வைத்திருக்கிறார்கள். தக்க இடங்களிலெல்லாம் பல நல்லறக் கட்டளைகளை ஏற்படுத்தித் தமிழும் சைவமும் தழைத்தோங்கச் செய்து வரும் திருப்பனந்தாள் திருமடத்து மகா சந்நிதானம் அவர்கள், குருகுலத்தாரின் திருப்பயணத்தை அப்போதைக்குத் தக்க முறையில் வரவேற்றுச் சிறப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# 8. தில்லை முதல் குடந்தை வரை சிவம் பெருக்கும் திருவினோர்

## பெயரும் முகவரியும்...

திரு. ஆ. சு. கணபதி பிள்ளை,
தலைவர், தில்லைத் திருமுறைக் கழகம், தேரடி கடைவீதி,
சிதம்பரம்.

## நன்றிக் குறிப்புகள்

சிவநேய அடியார் நேயங்களில் சிறந்த பெரியார்; தில்லை முதல் திருக் காளுட்டு முள்ளூர் வரை திருப்பயணத் திருக்கூட்டத்தார்க்கு உணவு, இடம், போக்கு வரவு வசதிகள் எல்லாம் முன்னின்று பலர் ஆதரவைத் திரட்டிச் செய்தவர்; தம்மால் இயன்றவரை அங்கங்கே உள்ள ஆதரவாளர்களைப் பற்றித் தெரிவித்தும் அவர்களை நேரில் கண்டும் திருப்பயணம் சிறப்புற நடைபெற உதவிகள் பல புரிந்த உரவோர்.



சிதம்பரம் நகை வணிகர், சைவ சமய வள்ளல்
திரு. S. இரத்தினசாமி செட்டியார் அவர்கள்

சிவநேயமிக்க பெருஞ் செல்வர்; பொருள் வளத்தோடு மன வளமும் கொண்டவர்; சமயப் பணிகளுக்குப் போதரவு செய்துவரும் வள்ளல்; ஆடம்பரம் விரும்பாத அடியவர். தம் குடும்பத்தினரையும், தம்மிடமுள்ள பணியாட்களையும், திருக்கூட்டத்தின் தில்லை நிகழ்ச்சிகளுக்கு உதவியாகப் பணியாற்றச் செய்து 3-6-54-ந் தேதி முழுமைக்கும் காலை மாலை சிற்றுண்டியும், பகல் இரவு அறுசுவையோடு இனிய உணவும், தங்குவதற்குத் தனி இடமும் அளித்துச் சிறப்பித்த நற்பண்பு மிக்க பெரியார்.



சிதம்பரம் சிவநேயச் செல்வர்
திரு. டி. கே முத்துக்கிருஷ்ண பிள்ளை அவர்கள்.

தில்லைத் திருமுறைக் கழகத்தாரோடு இணைந்து திருக்கூட்டத்தை வரவேற்ற தக்கவர்; திருவேட்களத்தில் அனைவருக்கும் சிற்றுண்டி கொடுத்துச் சிறப்பித்தவர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)